மாலை முரசு

பக்கங்கள் 17

## வலுவான எதிர்காலத்துக்கு தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்ய வேண்டும்

அநுரகுமார செவ்வி



“இலங்கையின் வலுவான எதிர்காலத்துக்குத் தேசிய மக்கள் சக்தியே அவசியம். 04▸

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 23 ஞாயிற்றுக்கிழமை 10.12.2023 அதிர்வு 132

## நாடு முழுவதும் மின் தடை ஏன் ஏற்பட்டது?

# உண்மையை அறிவியுங்கள்

### சபையில் சஜித் கோரிக்கை



“நாட்டில் நேற்று ஏற்பட்ட மின் தடைக்கு உண்மையான காரணம் என்ன? ஒரு மின் வழுங்கியில் ஏற்பட்ட கோளாறால் முழு நாட்டுக்கும் எவ்வாறு மின் தடை ஏற்பட்டது என்பதை மக்களுக்கு அறியத்தர வேண்டும்.?”

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது கேள்வி எழுப்பினார் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாடு முழுவதும் நேற்று மின் தடை ஏற்பட்டது. இந்தச் செயற்பாடானது மிகவும் பாரதூரமான ஒன்று. இந்த மின் தடை காரணமாக நீர் விநியோகத் தடையும் ஏற்பட்டது. வைத்தியசாலைகளில் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு பல சம்பவங்கள் நேற்று இடம்பெற்றன.

இந்த விடயம் குறித்து மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதற்காக இந்த விடயத்தை நான் கூறவில்லை. நேற்று இந்த மின் தடை ஏற்பட்டமைக்கான உண்மையான காரணத்தை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த விடயத்தில் பக்கச்சார்பாக நடந்துகொள்வதைவிடுத்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும். 04▸

## மின்னல் தாக்கமே காரணம்

### இலங்கை மின்சார சபை விளக்கம்



நாடு முழுவதும் நேற்று மாலை திடீரென மின் துண்டிக்கப்பட்டதற்கு, கொத்மலை – பியகம மின் விநியோக கட்டமைப்புக்கு மின்னல் தாக்கியமையே காரணம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மின்சக்தி அமைச்சும் இலங்கை மின்சார சபையும் இருவேறு விசாரணைகளை ஆரம்பித்துள்ளன என்று இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 5.10 மணியளவில் நாடு முழுவதும் திடீரென 04▸

## இந்திய மீனவர்கள் 25 பேர் இன்று கைது

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 25 இந்திய மீனவர்கள் 04▸



## எனது ஆதரவு கட்சி அங்கத்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டு புறக்கணிப்பு

### விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தன் வலியுறுத்து



திருகோணமலை மாவட்டத்தின் மூலக்கிளைகள் தெரிவின்போது எனக்கு ஆதரவாக உள்ள கட்சியின் நீண்டகால அங்கத்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி ஒழுக்காற்று குழுவிடத்தில் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில் அக்கட்சியின் மூலக்கிளைகள் மற்றும் தொகுதி, மாவட்டக் கிளைகள் புனரமைப்பு அண்மைக்காலமாக 04▸




# கிளைமோர் செய்யப் பயன்படுத்தும் வெற்றுக் கவர்களுடன் முதியவர் கைது!

(ந.லோகதயாளன்)

கிளைமோர் செய்யப் பயன்படுத்தும் வெற்றுக் கவர்களை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் கிளிநொச்சியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளைமோர் தயாரிக்கப் பயன்படுத்தும் வெற்றுக் கவர்கள் புதிதாகத் தயாரிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே இவை மீட்கப்பட்டு, இவற்றை உடமையில் வைத்திருந்த ஓர் முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கிளிநொச்சி நாச்சிக்குடாவைச் சேர்ந்த தம்பி குணசேகரன் என்னும் 63 வயது முதியவர் ஒருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாச்சிக்குடாவில் உள்ள ஓர் வீட்டில் இருந்து கிளைமோர் தயாரிக்கும் 10 இற்கும் மேற்பட்ட கிளைமோருக்கான வெளிக் கவர்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்டவை புதிய கவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரைச் சான்றுப் பொருளுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

# வாஸ்துவின் பெயரால் வீட்டுக்குள் நுழையும் ஆகாயத் தாமரையால் சூழற்பேரழிவுகள்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் எச்சரிக்கை

அதிர்ஷ்ட மூங்கிலத்தைத் தொடர்ந்து வாஸ்துவின் பெயரால் இப்போது ஆகாயத்தாமரை வீடுகளுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளது. அந்நிய நீர்க்களையான ஆகாயத் தாமரையை அதிர்ஷ்டம் தரும் தாவரமாகப் பலரும் வீடுகளில் நீர்த்தொட்டிகளில் வளர்க்க ஆரம்பித்துள்ளார்கள். பூச்செடிகள் விற்பனையாளர்களும் பின்விளைவுகளை அறியாது இதனை விற்பனை செய்யத்தொடங்கி உள்ளார்கள். இந்தப்போக்கு மிகவும் ஆபத்தானது.

மூடநம்பிக்கை சூழற்பேரழிவுகளை ஏற்படுத்தும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

ஆகாயத் தாமரை வீடுகளில் வளர்க்கப்படுவது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கை எந்த உயிரியையுமே தேவையற்றுப் படைப்பதில்லை. ஒவ்வொரு உயிரியும் முக்கியத்துவம் மிக்கவை. அவை பரிணாமிக்கும் சூழலின் சமநிலையில் இன்றியமையாத பங்களிப்பை நல்கி வருகின்றன. ஆனால், அவை இயற்கையாகத் தோன்றிய பிரதேசத்தில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்படும்போது அவற்றுள் சில



இனங்கள் ஆக்கிரமிப்பு இனங்கள் ஆகிவிடுகின்றன.

புதிய சூழலின் சமநிலையைக் குழப்பிச் சரிசெய்ய முடியாத அளவுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. உலகின் உயிர்ப்பல்வகைமையை அழித்துவரும் பிரதான காரணிகளில் ஒன்றாக இவ்வந்நிய ஊடுருவல் இனங்கள் உள்ளன.

அத்தகைய ஒரு அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரமே ஆகாயத் தாமரை ஆகும். ஆகாயத் தாமரை தென் அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட ஒரு அசுர நீர்க்களை.

நீரே தெரியாத அளவுக்கு விரைந்து மூடிவளரும் ஆற்றல் பெற்றவை. இதனால், நீர்ச்சூழற் தொகுதியில் ஏனைய உயிரினங்களின் வளர்ச்சியைப் பாதிப்பதோடு, நுளம்புகளின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன.

குளங்களில் இருந்து தப்பிச் செல்லும் இந்தக் களை வயல் நிலங்களில் பல்கிப்பெருகி நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. இதனால், இலங்கை அரசு ஆகாயத் தாமரையை அந்நிய ஊடுருவல் ஆக்கிரமிப்பு இனமாகக் கருதி அழிக்கத் தலைப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்திலிருந்து இதனை முற்றாக அகற்றுவதற்கு மிகப் பெருந்தொகைப் பணமும் பெருங்காலமும் எடுத்தது என்பது நினைவில் கொள்ளத்தக்கது. இன்னும் ஏராளமான குளங்கள் ஆகாயத் தாமரையின் ஆக்கிரமிப்புக்குள் திணறிக்கொண்டிருக்கும் நிலையில் அதிர்ஷ்ட தேவதை என்ற அந்தஷ்தை வழங்குவது அதற்கு அசுரப் பலத்தைப் பெற்றுக்கொடுத்துவிடும்.

வீடுகளிலிருந்து தவறுதலாக வெளியேறும் இதன் சிறு அரும்பே அதன் பல்கிப்பெருகும் ஆற்றலால் சூழலை அதன் ஆக்கிரமிப்பின்கீழ் விரைந்து கொண்டுவந்துவிடும்.

ஏற்கனவே பார்த்தீனியம், சீமைக்கருவேலம், இப்பில்இப்பில் போன்ற அந்நியன்களால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் எம் நிலம் ஆகாயத் தாமரையாலும் வலிகளைச் சுமக்க நேரிடும்.

எமது விவசாயத் திணைக்களம் ஆகாயத் தாமரை தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஏற்படுத்த முன்வரவேண்டும்.- என்றார்.



# மக்கள் பிரதேசம் சுவீகரிப்புக்கு எதிர்ப்பு; பொன்னாலைச் சந்தியில் கவனவீர்ப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும் பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சியை கைவிட வலியுறுத்தி போரட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கடற்றொழிலாளர்களும் பொது மக்களும் இணைந்து பொன்னாலை சந்தியில் இன்று காலை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது எமது கடல் எமக்கு வேண்டும், எமது நிலம் எமக்கு வேண்டும், கடலைச் சுவீகரித்து கடற்தொழிலாளர்களை பட்டினிச்சாவுக்குள் தள்ளாதே, எமது கடலை சுவீகரிக்க எவருக்கும் அனுமதியில்லை, ரணில் அரசே எமது கடலைச் சுவீகரித்து வரலாற்று தவறைச் செய்யாதே, மேச்சல் தரையையும் மயானங்களையும் மாட்டு வண்டி சவாரித் திடல்களையும் சுவீகரிக் கும் திட்டத்தை உடனே கைவிட வேண் டும் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கிய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் கட்சிகளின் சார்பில் சட்டத்தரணி க.சுகாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எனது ஆதரவு...

முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் மூலக்கிளை உள்ளிட்டவற்றின் புனரமைப்பின்போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியில் நீண்ட காலமாகச் செயற்படும் அங்கத்தவர்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இதையடுத்து, அவர்கள் தாம் தொடர்ச்சியாக ஆதரவளித்து வருகின்ற இரா. சம்பந்தனுக்கு குறித்த விடயம் சம்பந்தமாக உரிய தெளிவுபடுத்தல்களுடன் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இந்த விடயம் சம்பந்தமாக கரிசனை செலுத்திய இரா.சம்பந்தன், குறித்த மூலக்கிளை உள்ளிட்ட புனரமைப்பின் போது அங்கத்தவர்கள் தெரிவில் தாம் திருப்தி அடையவில்லை என்றும், அந்தத் தெரிவுகள் இதயசுத்தியுடன் நடைபெறாது தன்னை ஆதரிக்கும் கட்சியின் உறுப்பினர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் விசனத்தை வெளியிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி குறித்த விடயம் சம்பந்தமாக கட்சியின் ஒழுக்காற்றுக் குழு விசாரணைகளை நடத்தி உரிய தெளிவுபடுத்தல்களைச் செய்ய வேண்டும் என்றும், தவறுகள் இடம்பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீள் தெரிவு முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இந்தநிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவின் தலைவராக உள்ள சீனித்தம்பி யோகேஸ்வரன், சம்பந்தனின் குறித்த முறைப்பாடு சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தற்காலிக பொதுச் செயலாளர் வைத்தியர் பத்மநாதன் சத்தியலிங்கத்தின் திகதி ஒதுக்கீட்டுடனான அனுமதிக்காக காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு கிளை மற்றும் யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறைத் தொகுதி கிளைத் தெரிவுகள் சம்பந்தமாகவும் முறைப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக, கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் தலைமையில் நடைபெற்ற தெரிவில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மூன்று உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதேபோன்று காங்கேசன்துறை தொகுதிக்கான அங்கத்தவர்கள் தெரிவின்போதும் குறைபாடுகள் உள்ளன என்று கட்சியின் உறுப்பினர்கள் சிலரால் விசனம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், அது தொடர்பில் இன்னமும் எழுத்துமூலமான முறைப்பாடு ஒழுக்காற்றுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### தேசிய மக்கள்...

வெறுமனே ஆட்சி மாற்றம் மாத்திரம் போதாது."

– இவ்வாறு ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2022 இல் ராஜபக்ஷக்களைப் பதவியிலிருந்து அகற்றிய பின்னர் வாக்காளர்களுக்குத் தேர்தலில் வாக்களிப்பதற்கான முதலாவது சந்தர்ப்பம் அடுத்த வருடம் கிடைக்கவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் அடுத்த வருடம் இடம்பெறவுள்ளது.

உண்மையான பொருளாதார நெருக்கடிக்கு ரணில் அரசு தீர்வைக் காணவில்லை.

ஊழலும் பொருளாதார சமத்துவமின்மையுமே நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம். நாட்டை அபிவிருத்தி செய்து மக்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்கக் கூடிய பொருளாதார திட்டமே அவசியம்.

நாடு கோரி நிற்கும் அமைப்பு முறை மாற்றத்துக்கு அரசியல் கட்சி அவசியம் இல்லை. தேசிய விடுதலை இயக்கமே அவசியம். இதனையே நாங்கள் நிறைவேற்ற முயல்கின்றோம்.

எங்கள் கட்சி ஜே.வி.பி., எங்கள் இயக்கம் தேசிய மக்கள் சக்தி. இதன் காரணமாகவே எங்களால் வெற்றி பெற முடியும் என நாங்கள் கருதுகின்றோம். நாட்டின் சமகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் எனக் கருதுகின்றோம்.

இந்தச் சூழமைவில் ஜே.வி.பி. சர்வதேசத் தொடர்புகளை விஸ்தரித்துள்ளது. இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் உள்ளிட்ட வெளிநாட்டுத் தூதரகங்களுடன் தொடர்ச்சியான சந்திப்புக்களை ஜே.வி.பி. மேற்கொண்டு வருகின்றது." – என்றார்.

'ஜே.வி.பி. தனது சீன ஆதரவு – மேற்குலக எதிர்ப்புக் கொள்கையிலிருந்து விலகியுள்ளதா?' என்ற கேள்விக்கு, "உலகம் மாறிவிட்டது எங்கள் கட்சியும் மாறிவிட்டது" – என்று அநுரகுமார எம்.பி. பதிலளித்தார்.

### உண்மையை...

ஆகவே, இந்த மின் தடைக்கு என்ன காரணம்? ஒரு மின் வழங்கியில் ஏற்பட்ட கோளாறால் முழு நாட்டுக்கும் எவ்வாறு மின் தடை ஏற்பட்டது என்பதை எமக்கு அறியத்தர வேண்டும்.

அதன்படி நாட்டில் நேற்று நிகழ்ந்த மின் தடையால் ஏற்பட்ட செலவுகள், வைத்தியசாலைகளில் ஏற்பட்ட மின் தடையால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்த முழு அறிக்கையையும் வெளிப்படுத்த வேண்டும். சபாநாயகரின் அனுமதியுடன் இந்தப் பிரேரனையை முன்வைக்கின்றேன்" – என்றார்.

### மின்னல் தாக்கமே...

மின் துண்டிக்கப்பட்டு, பல பிரதேசங்களில் இரவு 10.20 மணியளவிலும், வேறு சில இடங்களில் நேரம் தாமதமாகவும் மீண்டும் மின் விநியோகிக்கப்பட்டு, நிலைமை இயல்புக்குத் திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

### இந்திய மீனவர்கள்...

கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களின் இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் – பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்படையினர் இன்று அதிகாலை மேற்கொண்ட சுற்றுக் காவல் (ரோந்து) நடவடிக்கையின் போதே மேற்படி மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள 25 இந்திய மீனவர்களும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், கடற்றொழில் நீரியல் வளத் துறை திணைக்கள அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைக்கக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.







# அக்குரணையில் தொடர் வெள்ளப்பெருக்கு; கட்டுப்படுத்த நிரந்தரத் தீர்வைக் காணுங்கள்!

## நாடாளுமன்றில் ரிஷாத் எம்.பி. கோரிக்கை

அக்குரணையில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்த நிரந்தரமான வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொண்டு, அந்த மக்களின் இயல்பு வாழ்வை சீரமைக்க நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளிக்கிழமை (08) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை – பாலஸ்தீன் நட்புறவுச் சங்கத்தின் செயலாளராக இருந்த முஜிபுர் ரஹ்மான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் புதிய செயலாளராக டிலான் பெரேரா எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, இஸ்ரேலின் அராஜகத்தை முடிவுக்குக் கொண்டுவர டிலான் பெரேரா எம்.பி. தனது பங்களிப்பை நல்க வேண்டும் எனவும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அக்குரணையில் தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். அந்தப் பிரதேச மக்களுக்கு அண்மையில் 300 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் 120 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. எனவே, இதற்கு நிரந்தர வேலைத்திட்டம் ஒன்று தேவை. வெளிநாட்டு உதவிகளைப் பெற்றாவது இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணுங்கள்.

தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகவும், இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள



தாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அண்மையில் கூறினார். எனவே, அதனை துரிதமாக மேற்கொள்ளுமாறும் அதன் மூலம், மன்னாருக்கு மட்டுமன்றி முழு நாட்டுக்கும் நன்மை கிடைக்க வழி சமைக்குமாறும் வேண்டுகின்றேன்.

மர்ஹூம் அஷ்ரப் காலத்தில் நல்ல நோக்குடன் அமைக்கப்பட்ட ஒலுவில் துறைமுகம், அதற்குப் பின்னர் வந்த அமைச்சர்கள் அதனை சரிவர பயன்படுத்திக்கொள்ளாமல் விட்டதால், அந்தப் பிரதேச வாழ் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

ஒலுவில் துறைமுகத்தால் அந்தப் பிரதேச மக்களுக்கு மிகவும் நன்மை பயக்கக் கூடிய நிலை இருந்தது. முறையாகக் கவனிக்கப்படாமையால் ஊருக்குள்ளே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, நிபுணத்துவம் வாய்ந்த வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இந்தத் துறைமுகத்தை சீரமைத்து, மக்களின் துன்பங்களை போக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றேன்.

அதுமல்ல, மன்னாரில் அதானி நிறுவனம் கொண்டுவரவுள்ள திட்டங்கள் தொடர்பில் அறிகின்றோம். சர்வதேச ரீதியில் கீர்த்திபெற்ற மன்னார் தீவை முற்றுமுழுதாக சுற்றுலாத்துறைக்கு தாரைவார்க்க நாம் இடமளிக்க முடியாது. அத்துடன், இந்தத் திட்டங்களுக்காக அங்குள்ள தனியார் காணிகளை பலாத்காரமாக, குறைந்த விலைக்கு அரசு வாங்கி, அதானி நிறுவனத்துக்கு இன்னுமொரு விலைக்கு கொடுக்கின்றது. இது நியாயமா? எனக் கேட்கின்றேன்.

தனியார் நிறுவனங்களுக்குப் பொது மக்களின் காணிகளை விற்காதீர்கள். இந்த நிலை தொடர்ந்தால் மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலையே ஏற்படும். அத்துடன், ஆஸ்திரேலியா நிறுவனங்கள் அந்தப் பிரதேசங்களில் மண் அகழ்வுக்கான உரிமையைப் பெற்றுக்கொண்டு, தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்த நிலையால் அப்பிரதேச வீடுகளுக்குள்ளேயும் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் இவ்வாறான அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்குவதை நிறுத்துங்கள்.

ஊடகத்துறையில் அரச நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. அவ்வப்போது வரும் அமைச்சர்கள் தமக்கு வேண்டியவர்களை, தகுதியில்லாதவர்களை நிறுவனத்தலைவர்களாகவும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகவும் நியமித்ததன் வெளிப்பாடே இது. எனவேதான், எந்தவித திட்டமிடலும் இல்லாமல் தொடர்ந்தும் நஷ்டத்தில் அரச ஊடக நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. பத்து வருட வேலைத் திட்டம் ஒன்றின் கீழ், அமைச்சர்கள் மாறினாலும் ஊடகக்கொள்கை மாறாத வகையில், செயற்றிட்டம் ஒன்றைக் கொண்டு வாருங்கள்.– என்றார்.

# பனிக்கட்டியாவ குளம் புனரமைத்துத் திறப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, மொறவெவ பிரதேச செயலர் பிரிவில் உள்ள பனிக்கட்டியாவ குளம், மீள் புனரமைப்பு செய்யப்பட்டு இன்று (10) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

37.45 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த திட்டமானது திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு கணிசமான நன்மைகளை வழங்கும் வகையிலும் விவசாய பாவனைக்கான நீர் வினைத் திறனை மேம்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரளவும் கலந்து கொண்டார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கிட்டுகின்றது புதிய கடன்கள்

நாளை மறுதினம் செவ்வாயன்று இலங்கைக்கு மங்களகரமான - சந்தோஷமான - செய்தி கிடைக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கடன் வாங்கிக் வாங்கியே தன் பொருளாதாரத்தை அழித்துக் கொண்ட இலங்கை நாட்டின் தலைவர் இன்னொரு பெருந்தொகைக் கடன் கிடைப்பதை பெரும் சந்தோஷச் செய்தியாகக் குறிப்பிடும் நிலைமைதான் இங்கு உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபைக் கூட்டம் நாளை மறுதினம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இதன் போது இலங்கை குறித்து மங்களகரமான செய்தியை நாணய நிதியம் அறிவிக்கவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையான 33 கோடி அமெரிக்க டொலர்கள், உலக வங்கியிடமிருந்து 25 கோடி அமெரிக்க டொலர்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 20 கோடி அமெரிக்க டொலர்கள் இம்மாதத்தில் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

அதாவது 78 கோடி அமெரிக்க டொலர் (அதாவது 25 ஆயிரம் கோடி ரூபா) கடன் கிடைக்கப் போகின்றது.

இனி என்ன? கடன் வாங்கிக் கல்யாணம் என்ற மாதிரிக் கொண்டாட்டம்தான். வந்த நிதியை அரசியல் இலக்குகளை அடைவதற்கான திட்டங் களில் கண்ணை மூடிக் கொண்டு செலவழித்து நாட்டைக் குட்டிச் சுவராக்க வேண்டியதுதான். அதுதானே இவ்வளவு காலமும் நடந்தது...!

தேசிய மற்றும் சர்வதேச கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான மறுசீரமைப்புகள் இலங்கை எதிர்பார்த்த மாதிரி, அதன் வசதிக்கேற்ப முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இம்மாதத்தில் மொத்தமாக 78 கோசி அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு கிடைக்கப்பெறவுள்ளது.

சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்கநர்கள் இலங்கைக்கு கடனை மீள் செலுத்த நிவாரண காலத்தை வழங்கவும் இணங்கியுள்ளனர். கடன் வட்டியில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் சர்வதேச கடன் வழங்குநர்கள் உறுதியளித்துள்ளனர் என்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

''கடன் மறுசீரமைப்புகளில் கிடைத்த வெற்றியானது நாட்டின் பொருளாதார மீட்சியை துரிதப்படுத்தியுள்ளது. தேசிய கடன் மறுசீரமைப்புகளின் பின்னர், சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பரிஸ் கழகம் உட்பட தனியார் கடன் வழங்குநர்களும் இலங்கைக்கு ஒத்துழைக்கும் வகையில் தீர்மானங் களை எடுத்துள்ளனர். ஆனால் நாங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடனை தள்ளுப்படி செய்ய க் கோரவில்லை. ஏனெனில் அவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தால் எமது மக்களுக்கு அது கௌரவ மானதாக இருக்காது'' என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.

கடன் மறுசீரமைப்புகளில் கிடைத்த வெற்றி யானது நாட்டின் பொருளாதார மீட்சியை துரிதப் படுத்தியுள்ளது என ஜனாதிபதி கூறியுள்ள போதிலும், அது அந்த வகையில் நடைபெறுமா என்பதைக் காலம்தான் முடிவு செய்யும்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்து, திவா லான பின்னரும், புதிய கடன் பெறுவது நாட்டுக்கு மேலும் கடப்பாட்டைக் கூட்டப் போகின்றது.

புதிய கடன்களும் புத்திசாலித்தனமாக - நிபுணத்துவமுறையில்-பயன்படுத்தப்படாவிட்டால் நாடு மீண்டெழவே வாய்ப்பில்லாமல் போய்விடும் என்பது உறுதி.

''முழுமையான வெற்றி இலக்கை அடையும் வரை இன்னும் சிறு காலம் அனைவரும் பங்களிப்புகளை செய்ய வேண்டும். வீழ்ச்சியடைந்த நிலையிலிருந்து நாட்டை முழு அளவில் மீட்பதே நம் அனைவரினதும் பொறுப்பகும்'' என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மைதான். முதலில் அரச நிதி வளங்களை ஆட்சித் தரப்பினர் சூறையாடுவதை நிறுத்தினால் - அல்லது அதைத் தடுத்தால் - நாடு மீண்டெழுவது சாத்தியமாகி விடும்.

# இளங்கலை பட்டதாரி சங்கத்தால் மாணவர்களுக்கான செயலமர்வு

**(கற்பிட்டி எம்.எச்.எம். சியாஜ்)**

புத்தளம் இளம்கலை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் புத்தளம் வெட் டாலை அசன் குத்தூஸ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 11 மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் செயலமர்வு பாடசாலையின் அதிபர் ஏ.ஜே.எம் இல்ஹாம் தலைமையில் நடைபெற்றது. இந்தச் செயலமர்வில் புத்தளம் வெட் டாலை அசன் குத்தூஸ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி பயிலும் சுமார் 30 மாண வர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வின் வளவாளர்க ளாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத் தில் கணக்கியல் துறையில் சிறப்புப் பட்டதாரியும் ஏ.சீ.சீ.ஏ. அங்கத்தவரும்



புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் சங் கத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினரு மான அசீம் ஸியாத் மற்றும் இஸ்லாமிய வங்கி மற்றும் நிதி நிர்வாகம் , உளவியல், கல்வி உளவியல் ஆகியவைகளில் பட்டம் பயின்றவரும் புத்தளம் தாருஸ்ஸ லாம் மஸ்ஜித் செயலாளரும் புத்தளம் எஸ்.ஈ.ஸி. கல்வி நிலையத்தின் இயக்கு நரும் புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவருமான ஷவ்வாப் நிபாயிஸ் ஆகிய இருவரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயன்மிகு பல கருத்துக்களையும் வழிகாட்டல்களை யும் வழங்கினர்.



# மனித உரிமை தினத்தில் தெருவெளி விழிப்புணர்வு

(த.சுபேசன்)

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தால் மனித உரிமைகள் தினமான இன்று சித்திரவதையில் இருந்து பாதுகாப்பதற்கான தெருவெளி விழிப்புணர்வை நாடகம் நடத்தப்பட்டது.

நிகழ்வு பலாலி ஆரோக்கிய மாதா ஆலயம் மற்றும் வளலாய் பகுதிகளில் இடம்பெற்றன.

விழிப்புணர்வு நிகழ்வைச் சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், பெரியோர்கள் எனப் பலரும் பார்வையிட்டனர்.





# எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் செயலமர்வு சாய்ந்தமருதில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீதி அமைச்சு சாய்ந்தமருது பிரதேச செயலகத்துடன் இணைந்து “கடந்த காலத்தை மறந்து எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்” எனும் தொனிப்பொருளில் கருத்தரங்கை நடத்தியது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இது இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகாவின் ஒருங்கிணைப்பில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.ஐ.முஅஃபிகா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், உளவளத்துறை ஆலோசகர் ஏ. மனுஸ் வளவாளராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், சாய்ந்தமருது இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். சமீலுல் இலாஹி, கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸான், சாய்ந்தமருது கலாசார உத்தியோத்தர் ஏ.தௌபீக் உட்பட சுமார் 60 இளைஞர், யுவதிகள் நிகழ்ச்சியில் பங்கு பற்றி பயனடைந்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.





# மனித உரிமை தின வாரம் திருமலையில் அனுஷ்டிப்பு

(ஹஸ்பர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏ.ச்.ஆர்.சி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாலையூற்று கிராமத்தில் சிவில் அமைப்புக்களால் மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.




பாலையூற்று மாதர் சங்க கட்டடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மனித உரிமைகள் தொடர்பான தெளிவூட்டலும், காணி சட்டங்கள் தொடர்பாகவும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் சிவில் செயற்பாட்டாளர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் கிராம மக்கள் மற்றும் ஏ.ச்.ஆர்.சி. நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏ.ச்.ஆர்.சி. நிறுவன சிவில் செயற்பாட்டாளர்களால் டிசெம்பர் 04 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் செல்லும் வாகனங்களை மறித்து உணவு கேட்கும் யானைகள்

## புத்தளம் - கதிர்காமம் வீதியில் வாகன சாரதிகள் அசௌகரியம்

(அஸ்ஹர் இப்றாஹிம் )

புத்தளம் மற்றும் கதிர்காமம் வீதிகளில் பயணிக்கும் வாகனங்களை வழிமறித்து மீண்டும் மீண்டும் உணவு கேட்கும் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் வாகன சாரதிகளும் பொது மக்களும் மரணப் பயத்துடன் தமது பயணத்தை தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியில் பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மாத்திரமின்றி இதர வாகனங்களையும் பட்டப்பகலில் யானைகள் வழிமறிக்கின்றன.

இதனால் பயணிகள் சொல்லொணாத் துயரத்தை அனுபவிப்பதோடு உணவு கொடுக்க மறுக்கும் சந்தர்ப்பத்தில் தனது தும்பிக் கையை வாகனத்துக்குள் விட்டு பயணப் பைகளைகளையும் , ஏனைய பொதிகளையும் இழுத்து



உணவு தேடுவதாகவும் பயணிகளும் வாகன சாரதிகளும் தெரிவித்தனர்.





# அட்டாளைச்சேனை ஆஸ்பத்திரியில் திருத்தப்பட்ட கட்டடம் திறந்து வைப்பு

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலைக்கான அவசர சிகிச்சை பிரிவு மற்றும் வெளி நோயாளர்கள் பிரிவுக்கெனப் புனர்நிர்மானம் செய்யப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே. ஜே. முரளிதரன் இதனை அண்மையில் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மாகாண சுகாதார பணிப்பாளர் கோஷ்டா, அட்டாளைச்சேனை பிரதேச செயலர் எம். ஏ. சி. அகமது ஷாபிர் மற்றும் மாவட்ட, பிரதேச வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் உலக வங்கி நிதி உதவியுடன் 3.2 மில்லியன் ரூபா செலவில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மேற்பார்வையில் இந்தக் கட்டடம் புனரமைக்கப்பட்டது.

# கன்னியா இராவணேஸ்வரன் மாணவர்கள் கௌரவிப்பு!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை –கன்னியா இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலய மாணவ, மாணவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (09) பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை பரதநாட்டிய போட்டி தேசிய மட்டப் போட்டிகள் அனுராதபுரம் மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

அதில் திருகோணமலை கன்னியா இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயம் – தப்பு நடனம் –கிராமிய குழு நடனத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது .

இந்தப் பாடசாலை தேசிய மட்டம்வரை சென்றது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்றுவித்த ஆசிரியர்–திருமதி .சுஜீவன் பிரசாந்தினி பாடல் ஆசிரியர் –திருமதி.கோகிலன் சரணியா பக்க வாத்தியம் – மாணவன் கை.வினோயன் லவர்சன்.மற்றும் மாணவர்களான சி.டிஷாந்த், கெ.அபிஷேக், க .பிராசன், கா .சோன்ஜன், செ .சரணி, ஸ்.திவ்யா, கை .கரணி, செ.நிவேதிகா ஆகியொர் நிகழ்வில் பாராட்டப்பட்டனர்.

இந்த வெற்றிக்கு முழுமையான ஒத்துழைப்புத் தந்த இந்தப் பாடசாலை அதிபர் தாமோதரம்பிள்ளை சிவானந்தம் பெற்றோர்களால் கௌரவிக்கப்பட்டார்.



# ஆசிரியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஒரு நாள் சம்பளம் மீளக் கையளிப்பு!

(பழுவூரான்)




கொவிட்- 19 நிதியத்துக்காக கிழக்கு மாகாண பிரதம செயலர், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஒரு நாள் சம்பளத்தை ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வியாளர்களது சம்மதம் இன்றி பெற்றுக் கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக நாங்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கைத் தாக்கல் செய்திருந்தோம்.

இந்த நிலையில் அவ்வாறு அசிரியர்களிடம் இருந்து அறவிடப்பட்டஒரு நாள் சம்பளம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும், மட்டக்களப்பு மாவட்டப் பொதுச் செயலாளருமான பொன்னுத்துரை உதயரூபன் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் அனுமதியின்றிய கொவிட்- 19 நிதி அறவீடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருதத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த ஊடகச் சந்திப்பு மட்டக்களப்பு ஊடக அமையத்தில் சனிக்கிழமை (09) இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,

இலங்கை ஆசிரியர் சங்கத்தால் கிழக்கு மாகாண இணைப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளருமாகிய பொன்னுத்துரை உதயரூபன் ஆகிய என்னாலும், பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், நமது தலைவர் பிரியந்த பெர்னான்டோ ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குத் தாக்கலில் சட்டமா அதிபர் பிரதிவாதியாகக் குறிப்பிட்டதன் காரணமாக சட்டமா அதிபர் அண்மையில் இது தொடர்பாக சம்மதம் தெரிவித்து, அந்த ஒரு நாள் பெற்றுக் கொண்ட பணத்தைத் திருப்பிச் செலுத்துவதாக உறுதி மொழியை உயர் நீதிமன்றத்தில் வழங்கினார்.

அந்த அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து பெறப்பட்ட 32.778 மில்லியன் ரூபா பணம் மீண்டும் 17 கல்வி வலயங்களையும் சேர்ந்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டது.

இந்த அடிப்படையில் மிகக் கூடிய பணத் தொகையாக திருகோணமலை கல்வி வலயத்தில் 2.895 மில்லியன் ரூபாவும், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 2.795 மில்லியன் ரூபாவும், கல்முனை கல்வி வலயத்தில் 3.846 மில்லியன் ரூபாவும் மீண்டும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தைப் பெரும்பாலான ஆசிரியர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள், மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கல்வித் திணைக்கள கல்வி பணிப்பாளர்களையோ அல்லது அங்குள்ள கணக்காளர்களையோ சந்தித்து அந்தப் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆகக் குறைந்த பணமான 95305 ரூபாவைக் கல்குடா வலயத்துக்கு ஒரு நாள் சம்பளமாகச் செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய வலயங்கள் மிகக் கூடுதலான பணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் பணத்தை ஓய்வு பெற்றவர்களும், அரச ஊழியர்களும் பணத்தை தங்களுடைய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், அரசினுடைய சில தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற போது கைது செய்யப்படுவது வழமையாக இலங்கையில் காணப்படுகின்றது.

எமது பொதுச் செயலாளர் கூட கைது செய்யப்பட்டு முல்லைதீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மாத்திரம் அல்ல ஊடகவியலாளர்களும் பல்வேறான அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது கண்கூடு.

இலங்கையினுடைய ஜனநாயகம் இன்று ஒரு கேள்விக் குறியாக இருக்கின்றது? இவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு, இது தொடர்பாகப் பல்வேறு அழுத்தங்களை நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறான சட்டங்கள் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டு, ஊடகவியலாளர்கள் தொழிற்சங்க வாதிகளை அடக்கு முறைக்கு உள்ளாக்குவதற்கான சூழல் ஏற்படக் கூடாது.- என்றார்.





# துருக்கி - இலங்கை உறவில் 75 ஆண்டுகள் நிறைவு!

(அஷ்ரப் ஏ சமத் )

துருக்கி – இலங்கை இராஜாந்திர உறவில் 75 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டுக் கொழும்பில் உள்ள துருக்கி தூதுவர் ஆர். டெமிட் உல்கிரி கொழு அலுவலக இல்லத்தில் ஞாப கார்த்த முத்திரை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வெளிநாட்டு அமைச்சர் அலி சப்றி, நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், மற்றும் இலங்கையில் உள்ள நட்பு நாடுகளின் தூமர்கள், பாகிஸ்தான், இந்தியா, பங் களதேஸ் உட்பட ஏனைய 20 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தூதர்களும் கலந்து கொண்டனர்..

இலங்கையின் முதலாவது துருக்கித் தூதராகக் கடமையாற்றிய காலம் சென்ற அமைச்சர் மாக்கான் மாக் காரின் பேரப்பிள்ளைகள், குடும்பத்தி னரை அழைத்து நினைவு முத்திரைகள் துருக்கித் தூதரால் கையளிக்கப்பட் டன.







# பழைய மாணவர்களின் பங்களிப்பில் தெரு விளக்குகள் அங்குரார்ப்பணம்!

(எம். எப். நவாஸ் )

அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலயத்தின் 2003 ஆண்டில் உயர்தரத்தில் கல்வி கற்ற மாணவர்களின் பொருளாதார ரீதியிலான பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட தெருவிளக்குகள் பொது மக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஒலுவில் பள்ளக்காட்டுக்குச் செல்லும் பிரதான வீதியின் ஆரம்பத்தில் 13 மின்கம்பத்துடன் இணைந்த தெரு விளக்கு பொது மக்களின் பாவனைக்காக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் எம்.ஏ.சீ. அகமது ஷாபிர் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலர் பாயிஸ் தலைமையில் அஸ்ஸிராஜ் 2003 கல்வி கற்ற மாணவர்கள் சார்பாக பிரதம ஒருங்கிணைப்பாளராக ஏ.எச்.எம் சிபாஸ், சமுர்த்தி முகாமையாளர் ஏ. எம். ஹமீட், நிர்வாககிராம உத்தியோகத்தர் ஏ. எல். ஜௌபர் மற்றும் இன்னும் பல அதீதிகள், பொது மக்களின் பங்கு பற்றலுடன் இடம்பெற்றது.

# இலங்கையில் பாரிய நெருக்கடிகளை உருவாக்கி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த 'மொசாட்' முயல்கிறதா?

## கேள்வி எழுப்புகிறார் ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான்

(நூருல் ஹுதா உமர்)

இஸ்ரேல் – பாலஸ்தீன் பிரச்சினை மிகப் பாரிய உலக நெருக்கடியாகத் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இலங்கையில் நிலவி வரும் டொலர் பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்காக இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி உயிருடன் சென்றவர்கள் மரணித்த உடல்களாக இஸ்ரேலில் இருந்து நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு எமது அரசு விரும்புகின்றது.

இவ்வாறு ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவர் இன்று ஞாயிற்றுக்கிழமை (10) ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து வெளியிடும் போதே இவ்வாறு கேள்வியெழுப்பினார். மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

இஸ்ரேல் – பாலஸ்தீன் பிரச்சினையானது மிக பாரிய உலகின் நெருக்கடியாகத் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், இலங்கையில் நிலவிவரும் டொலர் பிரச்சினைக்குத் தீர்வைக் காண இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்புகின்ற தீர்மானம் எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

இஸ்ரேலியர்களின் கட்டுப்பாட்டு பிரதேசம் தற்போது பாரிய இரும்புக் கோட்டை போல் உள்ளது. முன்பு இஸ்ரேலியர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு சென்று அங்கு வேலை பார்த்த பாலஸ்தீனர்களுக்கு இப்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பதிலாகவே இலங்கையர்களை பணிக்கு அமர்த்த இஸ்ரேல் திட்டமிட்டு உள்ளமை தெளிவாகிறது.

இஸ்ரேலில் இறந்த இலங்கையர்களின் உடல்கள் சில ஏற்கனவே சில தினங்களுக்கு முன்னர் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை சிறியளவில் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் வேலைக்காகச் சென்று அங்கு மரணித்தவர்களின் உடல்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட நேருமானால், மிக மோசமான எதிர் விளைவுகள் நாட்டில் ஏற்பட்டுவிடும்.

இஸ்ரேலிய உளவுப் படையான மொசாட் திட்டமிட்ட வகையில் இலங்கையில் பாரதூரமான நெருக்கடியை உருவாக்கி ஆட்சி மாற்றத்தை கொண்டு வர முயற்சிக்கின்றதா என்கிற சந்தேகமும் எமக்கு உள்ளது.

மேற்கத்தேய நாடுகளின் ஆசிர்வாதத்துடன் மொசாட்டின் கழுகுப் பார்வை இலங்கை மீது விழுந்திருக்கிறது என்று




சந்தேகிக்கின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பூகோள அரசியலைக் கரைத்துக் குடித்தவர். அவருக்கு இவற்றை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்று கிடையாது.

ஆனால், நாட்டுப் பற்றாளர் என்ற வகையில் அவருடைய மேலான கவனத்தை நாம் கோரி நிற்கின்றோம். இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்புகின்ற தீர்மானத்தை உடனடியாக கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.– என்றார்.





# உலக மனித உரிமை பிரகடனமும் ஐ.நாவில் ஈழத்தமிழருக்கான தீர்மானமும்!

■ நவீனன்

உலகளாவிய ரீதியில் மனிதர்களை சாதி, மதம், இனம், நிறம், மொழி, நாடு என்கிற பாகுபாடு காட்டி வேறுபடுத்தக் கூடாது. தனி மனிதன் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு வகை செய்வதே மனித உரிமையாகும். இந்தத் தினமே மனித உரிமை தினமாக 1950 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது.

இன்றைய மனித உரிமை தினத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மன்றத்தில் ஈழத்தமிழர்களுக் காக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பலரும் மறந்து விட்டனர்.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்க ளுக்கு விசாரணை நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை இங்கிலாந்து, ஜேர்மனி, கனடா உள்ளிட்ட 6 நாடுகள் கொண்டு வந்தன.

உலகமே உற்று நோக்கிய இந்தத் தீர்மானம் 21 நாடுகள் ஆதரவுடன் நிறைவேறியது. இந்தத் தீர்மானத்தைச் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, வங்கதேசம், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 11 நாடுகள் எதிர்த்தன. இந்தியா, நேபாளம், ஜப்பான், இந்தோனேசியா உள்ளிட்ட 14 நாடுகள் இந்த வாக்கெ டுப்பில் பங்கேற்கவில்லை.

## உலக மனித உரிமைகள் தினம்

உலக மனித உரிமைகள் தினம் டிசெம்பர் 10 ஆம் திகதி கடைபிடிக்கப்படு கிறது. ஐ.நா. பொதுச் சபை 1948 ஆம் ஆண்டு இந்தத் தினத்தைப் பிரகடனப்ப டுத்தியது. இந்தத் தினத்திலும் இலங்கை யில் தொடர்ந்து மனித உரிமை மீறல் நடந்து வருவதாகக் குற்றச்சாட்டு உள்ளது.

2009 இல் நடந்த இறுதிக் கட்ட போரின்போது, அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்ட குற்றச்சாட்டும் உள்ளது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை முன்வைத்து, ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில், முதலில் 2013 இல் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. சர்வதேச விசாரணைக் குழுவின் விசார ணைக்கு இலங்கை அரசு மறுத்தது.

இதுபோல, 2015 இலும் மற்றொரு தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. அப் போது சுயமாக விசாரணை நடத்துவதாக, இலங்கை அரசு அறிவித்தது. இதை நிராகரித்து, ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் 2021 இல் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக, 22 வாக்குகளும், எதிராகச் சீனா உட்பட 11 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா உட்பட 14 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

உலகத் தமிழர்கள் அனைவரும் உற்று நோக்கிய இலங்கைக்கு எதிரான ஐ.நா. சபையின் மனித உரிமை மீறல் தீர்மானம் நிறைவேறியிருந்தாலும், இந்தத் தீர்மானத்தின் தாக்கம் என்ன என்பதும், இதனால் என்ன எதிர்காலத் தில் நடக்கும் என்பதையும் தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

## உலக மனித உரிமைப் பிரகடனம்

தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ள தீர் மானங்கள் உருவாகுவதற்குரிய, உலக ளாவிய மனித உரிமைகள் பிரகடனமா னது என்பது பற்றிய விரிவான பார்வையை இந்தக் கட்டுரை தருகிறது.

உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனமானது (UDHR) மனித அடிப் படை உரிமைகளின் வரலாற்றில் பாரிய தாக்கங்களை கொண்டுவந்த ஒரு ஐ.நா. சாசனமாகும். 1948 செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையிடம் தீர்மான இலக்கம் 217 ஏ மூலம் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

தமிழ் பேசும் மக்கள் உலக மனித உரிமைப் பிரகடனம் பற்றி தெரிந்து கொள்வது அவசியமாகும். இந்த உரி மைப் பிரகடனம் பின்வருமாறு வெளி யிடப்பட்டுள்ளது. தனி மனித கௌரவ மும் ஊறுபடுத் தப்பட முடியாத அடிப் படை உரிமைகளும் உலகில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பன நிலவுதற்கு அடிப்படையாகவுள் எதாலும், மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும் அவற்றை அவமதித்த லும், மனுக்குலத் தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தி யுள்ள காட்டுமிராண் டித்தனமான செயல் களுக்கு இடமளிக்க முடியாது.

பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந திரம், அச்சத்திலிருந்தும், வறுமையிலி ருந்தும் விடுதலை ஆகியவற்றை மனி தன் பூரணமாக துய்க்கத்தக்க இலட்சிய வாழ்வொன்றின் உருவாக்கமே மனித குலத்தின் மிகவுயர்ந்த குறிக்கோளாக எடுத்தியம்பப்பட்டுள்ளது.

## மனித உரிமை பாதுகாக்கப்படுவது அவசியம்

கொடுங்கோன்மைக்கும், அடக்கு முறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்யும் நிலைக்குத் தனி மனிதன் தள்ளப்படாமலிருக்க, வேண்டு மெனில் சட்டத்தின் ஆட்சி மூலம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அத்தி யாவசியமாகும்.

நாடுகளிடையேயான நட்புறவுகள் ஏற்படுத்தப்படுவதும் வளம்படுத்தப்பட வதும் மேலியம்பிய இந்த அடிப்படையில் அமைதல் இன்றியமையாததாகும்.

ஐக்கிய நாடுகள் சபையும் அதனில் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ள மக்க ளும், அடிப்படை மனித உரிமைகள் பற்றிய அனைவரின் நம்பிக்கையையும் தனி மனித கௌரவம், அவ்வாழ்வின் பெறுமதி, ஆண்கள்- பெண்களிடையே யான சமத்துவம் ஆகியவற்றை மீள வலியுறுத்தி அதிசுதந்திரச் சூழலில், சமுதாய முன்னேற்றம், வாழ்க்கைத் தர உயர்வு ஆதியவற்றை பட்டயம் ஒன்றின் மூலம் உருவாக்க வேண்டும்.

மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களுக்கான உலக மதிப்பை யும், அனுட்டானத்தையும் மேம்படுத் தலை, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கூட்டுறவுடன் முழுமையாகச் செயற்படுத் தவென அங்கத்துவ நாடுகள் உறுதி கொண்டுள்ளன.

இந்தச் சூளுறுதியைப் பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு, இவ்வுரிமை கள் சுதந்திரங்கள் பற்றிய புரிந்துணர் விருத்தல் முக்கியமுடையது என்பதா லும், ஐ.நா. பொதுச் சபையானது பிரகட னப்படுத்துகிறது.

சமூகத்தின் ஒவ்வொரு தனிமனி தனும் ஒவ்வொரு ஏற்பாட்டமைப்பும், இவ்விலட்சியங்களை இடையறாது மனதில் இருத்தி, இவ்வுரிமைகள் சுதந்திரங்களுக்கான மதிப்பை மேம்படுத்துதற்குக் கற்பித்தல் மூலமும், கற்றுணர வேண்டும்.

தேசிய மற்றும் சர்வதேசிய வகையில் நிலை கொண்ட நடவடிக்கைகள் மூல மும் முயலும் தேவையை நோக்கி, அங் கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும், தத்தம் குடி மக்களிடையேயும், தங்கள் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் ஆட்புலத்து மக்களிடையேயும், இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் முழுமையாகவும் வலிவும் பயனுறுதிப்பாடும் கொண்ட முறையிலும் ஏற்கப்பட்டு அனுட்டிக்கப்படுவதை நிலைநிறுத்த வேண்டும்.

சகல மக்களும் நாட்டு இனங்களும் தத்தமது சாதனை இலக்கின் ஏற்புடை அளவாகக் கொள்ளப்பட வேண்டிய வகையில் அமைந்த இந்த மனித உரிமைகளுக்கான உலகப் பொதுப் பிரகடனத்தைப் ஐ.நா. பொதுச் சபை யானது பரிந்துரைக்கின்றது.

# வங்கக்கடலில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பது சட்டப்பூர்வ உரிமையாக்கப்பட வேண்டும்!

## அன்புமணி ராமதாஸ் கோரிக்கை



“வங்கக்கடலில் பாரம்பரியமாக தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வரும் பகுதிகளில் தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பது சட்டப்பூர்வ உரிமையாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும்.

இப்போது கைது செய்யப்பட்ட 25 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் வாடும் அனைத்து மீனவர்களையும், இலங்கை அரசிடம் உள்ள அனைத்து படகுகளையும் மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

– இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக தனது எக்ஸ் வலை தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

“நாகை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம் மற்றும் புதுவை காரைக்கால் மாவட்டங்களைச் சேர்ந்த 25 மீனவர்களை கைது செய்துள்ள இலங்கைக் கடற்படை அவர்களின் இரு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

தனுஷ்கோடி அருகே ராமேஸ்வரம் மீனவர்களின் விசைப்படகு மீது தங்களின் படகை மோதி சிங்களக் கடற்படை சேதப்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் சேதமடைந்த படகில் இருந்த 5 மீனவர்கள் அதிஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளனர். சிங்களக் கடற்படையினரின் இத்தகைய அத்துமீறல்கள் கண்டிக்கத்தக்கவை.

கடந்த 7 ஆம் திகதி தான் ராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை மீன்வர்கள் 21 பேரை சிங்களக் கடற்படை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது. அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகள் வெற்றி பெறாத நிலையில் மேலும் 25 பேரை சிங்களக் கடற்படை கைது செய்துள்ளது. மிக்ஜாம் புயல் காரணமாக கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கடலுக்கு செல்லாத மீனவர்கள் கடந்த சில நாட்களாகத் தான் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். அதற்குள்ளாகவே அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது தமிழக மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்களின் வாழ்வா தாரத்தை அழிக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்துடன் தான் அவர்களை சிங்களக் கடற்படை கைது செய்து வருகிறது என்பதை பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். இதை உணர்ந்து இந்த சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் கடிதங்களை மட்டும் எழுதிக் கொண்டிருப்பது போதாது. அதனால் எந்த பயனும் ஏற்படாது.

வங்கக்கடலில் பாரம்பரியமாக தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வரும் பகுதிகளில் தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பது சட்டப்பூர்வ உரிமையாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும். இப்போது கைது செய்யப்பட்ட 25 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் வாடும் அனைத்து மீனவர்களையும், இலங்கை அரசிடம் உள்ள அனைத்து படகுகளையும் மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செல்வாக்குமிக்க உலகத் தலைவர்களில் பிரதமர் மோடி மீண்டும் முதலிடம்!

## சர்வதேச கருத்துக் கணிப்பில் தகவல்

செல்வாக்குமிக்க உலக தலைவர்களில் பிரதமர் மோடி மீண்டும் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு பிரபல கருத்து கணிப்புநிறுவனமான ‘மொர்னிங் கன்சல்ட்’ செயல்படுகிறது.

இந்த நிறுவனம் சார்பில் உலகின் செல்வாக்குமிக்க தலைவர்கள் குறித்து அந்தந்த நாடுகளின் மக்களிடம் அவ்வப போது கருத்துக் கணிப்பு நடத்தப்படுகிறது. இதன்படி அமெரிக்கா, இந்தியா உட்பட 22 நாடுகளில் ‘மொர்னிங் கன்சல்ட்’ நிறுவனம் அண்மையில் கருத்துக் கணிப்பு நடத்தி உலகத் தலைவர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டு



உள்ளது.

இந்த பட்டியலில் இந்திய பிரதமர் மோடி முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு ஆதரவாக 76 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர்.

மெக்ஸிகோ ஜனாதிபதி லோபஸ் ஒபரடோர் 66 சதவீத வாக்குகளுடன் இரண்டாம் இடத்திலும் சுவிட்சர்லாந்து ஜனாதிபதி அலைன் பெர்செட் 58 சதவீத வாக்குகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா 49 சதவீத வாக்குகள், அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் 47 சதவீத வாக்குகள், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி 41 சதவீத வாக்குகள், பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் டி குரோ 37 சதவீத வாக்குகளுடன் அடுத்த டுத்த இடங்களைப் பிடித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 37 சதவீத வாக்குகளுடன் 8 ஆவது இடத்தில் உள்ளார்.

# இஸ்ரேலுக்கு இராணுவத்திற்கு ஆயிரக்கணக்கான போர் டாங்கிகளை அனுப்புகிறது அமெரிக்கா!



காசா பகுதியில் போரில் ஈடுபட்டு வரும் இஸ்ரேலிய இராணுவத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் 14 ஆயிரம் போர்த் டாங்கிகளை அமெரிக்கா அனுப்பவுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 07 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்ட ஹமாஸ் அமைப்பு 1400 இற்கும் மேற்பட்டவர்களை கொன்று 250 இற்கும் மேற்பட்டவர்களை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றது.

இதனையடுத்து, அன்றிலிருந்து தொடர்ந்து காசாமீது இஸ்ரேல் படையினர் மூர்க்கத்தனமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதில் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும் பெரும் எவானோர் காயமடைந்தும் உள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்க காங்கிரஸின் அனுமதி இல்லாமல், அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் நிர்வாகம் இஸ்ரேலுக்கு 14 ஆயிரம் டாங்கிகளை விற்க தயாராகி வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்க காங்கிரஸின் அனுமதி இல்லாமல், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் இஸ்ரேலுக்கு 14 ஆயிரம் டாங்கிகளை விற்க தயாராகி வருகிறது.

பைடன் நிர்வாகம் எடுத்த அவசர முடிவின்படி இந்த டாங்கிகளின் விற்பனை நடைபெறும். இதன் மதிப்பு 106.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# இஸ்ரேலுக்கு செல்லும் கப்பல்கள் தொடர்பில் உலக நாடுகளுக்கு ஹூத்திகள் எச்சரிக்கை!






இஸ்ரேலுக்குச் செல்லும் அனைத்து கப்பல்களையும் அவர்கள் எந்த நாட்டவர்கள் என்பதை பொருட்படுத்தாமல் குறிவைக்க இருப்பதாக யேமனின் ஹூத்தி இயக்கம் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இஸ்ரேலிய துறைமுகங்களை பயன்படுத்துவதற்கு எதிராகவும் அனைத்து சர்வதேச கப்பல் நிறுவனங்களையும் ஹூத்தி இயக்கம் எச்சரித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ்/க்கும் இடையே நடந்துவரும் மிக மோசமான போருக்கு மத்தியில் ஈரான் ஆதரவு ஹூத்திகளால் மத்திய கிழக்கில் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

அண்மைய நாட்களில் செங்கடல் மற்றும் அதன் பாப் அல்-மண்டப் ஜலசந்தியில் இஸ்ரேலுடன் தொடர்புடைய பல கப்பல்களை ஹூத்திகள் தாக்கி கைப்பற்றியுள்ளனர்.

இதனிடையே, பலஸ்தீனியர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தான் தங்களின் நடவடிக்கைகள் இருப்பதாக ஹூத்தி தரப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், கப்பல்கள் மீதான தாக்குதலானது ஈரான் முன்னெடுக்கும் பயங்கரவாதம் என குறிப்பிட்டுள்ள இஸ்ரேல், சர்வதேசகடல் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் எனவும் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஹூத்தி தரப்பு தெரிவிக்கையில், நிரந்தர போர் நிறுத்தம் ஏற்படும் வரையில் இஸ்ரேலிய துறைமுகங்களுக்கு செல்லும் அனைத்து கப்பல்களும் செங்கடல் மற்றும் அரபிக்கடலில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளது என அறிவித்துள்ளது.

மேலும், காசா மக்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்துகள் கிடைக்கவில்லை என்றால் செங்கடல் ஊடாக இஸ்ரேலிய துறைமுகங்களுக்குச் செல்லும் அனைத்து கப்பல்களும், எந்த நாட்டினராக இருந்தாலும், தங்களது ஆயுதப் படைகளுக்கு இலக்காகிவிடும் என ஹூத்தி தரப்பு அறிக்கை ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், தங்களின் இந்த முடிவு உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# முஸ்லிம் கலாச்சார திணைக்களத்திடம் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**(நூருல் ஹுதா உமர்)**

அண்மையில் குர்ஆன் மனனம் செய்யும் மாணவன் மர்மமான முறையில் மரணித்த சம்பவத்தோடு தொடர்புடைய மதரஸத்து ஷபீலித் ரஷாத் என்ற மதரஸா முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் ஒரு குர்ஆன் மதரஸாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

குர்ஆன் மதரஸாவாக பதிவு செய்யப்படும் ஒரு நிறுவனம் முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளுக்கு அமைய ஒரு ஹிப்லு மதரஸாவாக செயல்பட முடியாது. குர்ஆன் மதரசாக்கள் மாணவர்கள் தங்கி இருந்து படிப்பதற்கான விடுதி வசதியை வழங்க முடியாது. ஹிஃப்ளுா மதரஸாக்கள், அரபிக் கல்லூரிகள் மாத்திரமே மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கான வசதிகளை வழங்க முடியும்.

குர்ஆன் மதரஸாவாகப் பதிவு செய்யப்பட்ட மதரஸத்து ஷபீலித் ரஸாத், ஹிஃப்ளுா மதரஸாவாகச் செயல்பட்டது ஒழுங்கு விதிகளுக்கும், திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு முரணானது ஆகும்.

இது குறித்த மேலும் கருத்து தெரிவித்த நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச். இஸ்மாயில்,

முஸ்லிம் கலாச்சார திணைக்களத்தின் விதிமுறைகளின்படி மதரசத்து ஷபீலித் ரஸாத்தின் சொத்துக்கள் வக்ஃப் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மதரஸாவின் நிலம் மற்றும் வளாகம் வக்ஃப் செய்யபடாமல் தனி நபருக்கு சொந்தமானது என்ற குற்றச்சாட்டுகளும் இன்று எழுந்துள்ளன.

மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில், இந்த மதராசாவின் செயல்பாடுகள் குறித்து உடனடி விசாரணை ஆரம்பிக்குமாறும் விசாரணை முடியும் வரை அதன் குறித்த மதரஸாவின் பதிவை இடைநிறுத்தி வைக்க நீதிக்கான மய்யம் கலாச்சார திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கிறது.

திணைக்களத்தின் விதிமுறைகளை வெளிப்படையாக மீறியதற்காக மதரசத்து ஷபீலித் ரஸாத்தின் நிர்வாகிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறது.–என்றார்.

## வாவியில் குளித்துக் கொண்டிருந்த பெண்ணை

# பலாத்காரம் புரிந்த நபருக்கு 4 வருடங்கள் கடூழியச் சிறை!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறையிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரியும் திருமணமான பெண்ணொருவர் வேலை முடிந்து வீட்டுக்கு வந்து அருகிலுள்ள வாவியில் குளித்துக் கொட்டிருக்கும் போது இளைஞர் ஒருவரால் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அம்பாறை பொது வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அம்பாறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அம்பாறை மேல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன் போது மேல் நீதிமன்ற நீதிவான் நலிந்த ஹேவாவாசம், சந்தேக நபருக்கு 4 வருடங்களுக்குக் கடூழிய சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்ட ஈட்டை வழங்குமாறும் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு போதை மாத்திரை விற்றவர் கைது!

**(ரஸீன் ரஸ்மின்)**

பாடசாலை மாணவர்கள் மற்றும் தனியார் வகுப்பு மாணவர்கள் உட்பட இளைஞர்களுக்கு போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த தனியார் மருந்தக ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அனுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் அனுராதபுரம் தஹியாகம சந்திக்கு அருகில் அமைந்துள்ள தனியார் மருந்தகம் ஒன்றில் பணிபுரிந்து வந்த 22 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கைது செய்த சந்தர்ப்பத்தில், 685 மாத்திரைகள் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாத்திரைகள் வைத்தியர்களின் ஆலோசனைப்படி, நோயாளிகளுக்கு மட்டும் வழங்கப்படுபவை. அந்த மாத்திரைகளை அதிகமாக உட்கொண்டால் அது போதையை ஏற்படுத்தும் எனவும் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம்!

**(மஸ்கெலியா நிருபர்)**

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம் வாரத்தின் இறுதி தினம் மற்றும் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் நுவரெலியா நகரில் பேரணி இடம்பெற்றது.

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து நுவரெலியாவை சேர்ந்த ஒன்பது சமூக மட்ட அமைப்புக்களின் ஏற்பாட்டில் பேரணி இடம்பெற்றது.

அதனுடன் பஸ்கள் மற்றும் வியாபார நிலையங்களிலும் பெண்கள் வன்முறை தொடர்பான துண்டு பிரசுரங்கள் ஒட்டப்பட்டன. நிகழ்வில் பெரும் எண்ணிக்கையில் பெண்கள் கலந்து கொண்டனர்.



# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் வழங்கல்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் அற்றார் அழிபசி தீர்த்தல் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின்கீழ் நேற்று சனிக்கிழமை (09) கொட்டடி, இருபாலை ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதற்கான நிதி அனுசரணையை அமரர் பொ.பரமேஸ்வரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தினர் வழங்கியிருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் திருமதி பராசக்தி பரமேஸ்வரன் கலந்து கொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

கொரோனாப் பேரிடர்க் காலத்தில் ஏற்பட்ட பொது முடக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவு காரணமாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டே கொரோனாத் தொற்று ஏற்பட்ட காலப் பகுதியில் இருந்து தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நன்கொடையாளர்களின் அனுசரணையோடு அற்றார் அழிபசி தீர்த்தல் என்ற உலருணவுப் பொதிகளை வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.







இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உலகத் தமிழர் பேரவை யின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினர் ஸ்ரீ லங்கா ரமண மஹா நிக்காய பீடத்தின் தேரர் ரமண நிக்காய மற்றும் முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய, அகில இலங்கை ஜம்இய்யத்துள் உலமா சபையினர் ஆகியோரைச் சந்தித்து 'இமயமலை' பிரகடனத்தைக் கையளித்தனர்.